Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 3?9

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆடி 16 ஆம் நாள் ஸபர் 17 (31-7-61) | திங்கட்கிழமை | இதழ் 1?3

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2. மதுரை

# இருளில் யாழ்ப்பாணம்

## மூழ்கியது

## சுன்னுகம் மின்சார நிலையத்தில் கோளாறு

### ஆஸ்பத்திரி, பொலிஸ் நிலையத்தில் சங்கடம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றிரவு யாழ்ப்பாணம் நகரில் மீண்டும் மின்சாரக் கோளாறு ஏற்பட்டது. இரவு 8–15 முதல் 9–15 வரை நகரின் சில பகுதிகள் இருளில் ஆழ்ந்து விட்டன. சில பகுதிகளில் அதற்கு மேலும் அதிக நேரம் இருள் நீடித்ததாக அறிவிக்கப்பட்டது. இவ்விதம மின்சாரக் கோளாறு ஏற்படுவது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இப்போது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

ஆஸ்பத்திரிகள், பொலிஸ் நிலையங்கள் ஆகியன இருளினுல் பாதிக்கப்பட்ட இடங்களில் பிரதானமானவை. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வார்டுகள் இருளில் மூழ்கிக் கிடந்தன. ஒன்றிரண்டு லாம்புகள் மட்டுமே வார்டுகளில் உபயோகிக்கப்பட்டதாய் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர் கூறினுர். யாழ்ப்பாணம் மின்சார நிலையம் இவ்வித இக்கட்டான சமயங்களில், ஆஸபத்திரிக்கு விசேஷமாக மின்சார விநியோகத்துக்கு ஒழுங்கு செய்வதுண்டென்றும், ஆனுல் அதன் சேவை கூட நேற்றுக்கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டது. பொலிஸ் நிலையத்திலும் அவசர டெலிபோன் அழைப்புகளைக் கூட பெறமுடியாதநிலை ஏற்பட்டது.

சுன்னுகம் பிரதான மின்சார நிலயத்திலிருந்தே யாழ்ப்பாணம் முழுவதற்கும் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் கோளாறுதான் இதற்குக்காரணம் என யாழ்ப்பாண மின்சார நிலயஅதிகாரி ஒருவர் கூறினுர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் இது பற்றிக் குறிப்பிடுகையில், வரியிறுப்பாளர்கள் வரிப்பணம் கட்டுவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டால் பெரும் கெடுபிடி செய்யப்படுகிறதென்றும், ஆனுல் மின்சாரக்கோளாறு பற்றி விசாரித்தால் சரியாகப் பதிலளிக்காமலே டெலிபோனை மின்சார நிலயத்தைச்சேர்ந்தவர்கள் வைத்துவிடுவதாயும் புகார் கூறினுர்.

யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தினர் ஒருவர், மின்சாரக் கம்பிகளின் இணைப்புக்கள் 30 வருடப் பழமை வாய்ந்தவை என்றும், நகரிலுள்ள பல மின்சார விநியோக உபகரணங்கள் பழுதடைந்துள்ள நிலையில் இன்னும் திருத்தப்படாமலே இருக்கிறதென்றும், வருகிற செவ்வாய்க்கிழமை மாநகரசபை நிதிக்கமிட்டியில் தாம் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கப் போவதாயும் கூறினுர்.

## தென் கொரிய அதிகாரிகள் மீது விசாரணை

ஸியோல், ஜுலை 30

முன்னுள் தென்கொரிய அரசாங்கத்தில் உயர்பதவியிலிருந்த 67 பேர் மீதான ராணுவ கோர்ட் விசாரணை நேற்று ஆரம்பமாகியது. அவர்கள் தலை மொட்டையடிக்கப்பட்டு கையில் விலங்குகளுடனும், வெண் ஆடைகளுடனும் கோர்ட்டில் காட்சியளித்தனர்.

## ஆபிரிக்க அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

புதுடில்லி, ஜுலை 30

புதிதாசுச் சுதந்திரமடைந்த ஆபிரிக்கநாடுகளின் அதிகாரிகள் பலருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## நகரங்கள், கிராமங்களில் வீடமைப்புத் திட்டம்

### விசேஷ குழு நியமனம்

கொழும்பு, ஞாயிறு

நகரங்களிலும், கிராமங்களிலும் வீடுகள் பற்றுக்குறையைப் போக்குமுகமாக வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா, ஒரு விசேஷ குழுவை நியமித்திருக்கிறுர். திரு. எம். எஸ். அலீப் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு, தனியார் துறையிலுள்ளவர்கள் உட்பட பலரது ஆலோசனையையும் பெற்றபின் நகரங்கள், கிராமப் புறங்களில் வீடமைப்பு பற்றி அரசாங்கத்துக்கு விசேஷ யோசனைகளைக் கூறும் என அறிவிக்கப்படுகிறது.

## விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

கருவாடு ருத்தல் ரூ. 1.30 சதம் விற்கும்போது ருத்தல் ஒன்றுக்கு ரூபாய் 2 கொடுத்து பார்லிமெண்ட் கண்டீன் கருவாடு வாங்கவேண்டியிருந்தது என்ற குற்றச் சாட்டை விசாரிக்கும்படி விலைக் கட்டுப்பாட்டு இலாகாவைத் தான் கேட்டிருப்பதாக உணவு மந்திரு. டி. பி. இலங்கரத்தின நேற்றுத் தெரிவித்தார்.

## ஜி. ஸி. ஈ. பரீட்சை

கொழும்பு, ஞாயிறு

ஜி. ஸி. ஈ. பரீட்சை சம்பந்தமாக கல்வி இலாகா ஒரு புதிய மாறுதல் செய்துள்ளது. ஆரம்பப் பரீட்சைக்கு ஒருவர் இரண்டு வருடமும் முடிவான பரீட்சையில் இரண்டு வருடமும் தான் தோற்றமுடியும். அதற்குமேல் யாருக்கும் இப்பரீட்சையில் சித்திபெருவிடில் பிறகு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## வரவு செலவு திட்ட மசோதா விவாதம்

### செப்டம்பர் 7–ந் திகதி முடிவடையும்

இலங்கை அரசாங்கத்தின் வரவு-செலவு திட்டமசோதாவைப் பற்றிய விவாதம் வருகிற ஆகஸ்ட் மாதம் 7-ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை முடிந்து வாக்கெடுக்கப்படும்.

மூன்ரும் முறை விவாதம் செப்டம்பர் மாதம் 7-ந் திகதி முடிவடையுமென்று ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

## ‘இந்தியாவே எங்கள் தாய் நாடு’

—சர் அல்பர்ட்

### இந்திய ஹைகமிஷனருக்கு உபசாரம்

கொழும்பு, ஞாயிறு

இந்திய ஹைகமிஷனரான திரு. கபூருக்கு, இந்தியா-இலங்கை நட்புச் சங்கத்தார் நேற்று மாலை கால்பேஸ் ஹோட்டலில் ஒரு சிற்றுண்டி உபசாரமளித்தனர். சங்கத் தலைவர் சர் அல்பர்ட் பீரிஸ், ஹைகமிஷனரை வரவேற்றுப் பேசுகையில் “இந்தியாவை இலங்கையர் தங்கள் தாய் நாடென்றே கருதுகின்றனர். சில பிரச்சினைகள் இரு நாடுகளுக்குமுள்ளன. இலங்கை சிறிய நாடு. இங்கு ரப்பர் உற்பத்தியானுலும் ரப்பர்போல் அது நீள முடியாது. ஜனத்தொகை அதிகரித்துவருகின்றது.

இந்தியாவோ பெரிய நாடு. இங்குள்ள சிங்களவரையும் அங்கு குடியேற்ற முடியும். ஆகவே இங்குள்ள நாடற்றவர் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க இந்திய ஹைகமிஷனர் பெரிய மனதுடன் உதவுவாரென்று நம்புகிறேன்” என்ருர்.

ஹைகமிஷனர் கபூர் பதிலளிக்கையில், இச்சங்கப் பெயரில் ‘நட்பு’என்ற சொல் தேவையில்லை என்றும், இந்தியா-இலங்கை சங்கம் என்று பெயரளிக்கலாமென்றும், நாடற்றவர் பிரச்சினையை இருதரப்பினரும் நல்லெண்ணம் காட்டித் தீர்க்கலாமென்றும், இதற்கு இச்சங்கம் உதவுமென்றே தாம் நம்புவதாயும் சொன்னுர்.

## வலித்தூண்டல் அர்ச். சந்தன மாதா கோவில்

மாவிட்டபுரம், திங்கள்

வலித்தூண்டல், அர்ச். சந்தனமாதா கோவிலில் சனிக்கிழமை மாலை வேஸ்பர் நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை காலை கட்டளைக்குருவானவர் எஸ். கோமஸ், ஓ. எம். ஐ. பாடற்பூஜைநடத்தினர். பூஜை முடிவில் அர்ச். சந்தன மாதா சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லபபட்ட பின் ஆசீர்வாதத்துடன் கொண்டாட்டம் முடிவடைந்தது.

## சம்மங்கொடுவா பகுதியில் இனிப்புக் கட்டிப்பால் ஆலை

### தினசரி 1000 ருத்தல் வெண்ணெய் உற்பத்தி

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் பால்சபை, இனிப்புக் கட்டிப்பால் தொழிற்சாலை ஒன்று நிறுவ திட்டமிட்டிருக்கிறது. சம்மங்கொடுவா பகுதியில் இத் தொழிற்சாலை நிறுவப்படும். கால் நடை வளர்ப்புத் திட்டமும் இதில் அடங்கியிருக்கும். தினசரி வெண்ணை உற்பத்தியை 1000 ருத்தலாக அதிகரிப்பதென்றும், ருத்தல் ஒன்று ரூ. 2.10க்கு விற்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுவாமி சர்வானந்தர் காலமானுர்

பம்பாய், ஜுலை 30

அகில இந்திய சாதுசமாஜத் தலைவர் சுவாமி சர்வானந்தர் இன்று அதிகாலையில் இங்கு காலமானுர்.

## காஷ்மீர்

### அயூப்கான் கருத்து

கராச்சி, ஜுலை 29

“காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாதவரை அண்டை நாடான இந்தியாவுடன் நேசமாக வாழ்வதுபாகிஸ்தானுக்கு சாத்தியமில்லை” என்று பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் கூறினுர்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவிடில் அது பாகிஸ்தானின் பந்தோபஸ்துக்கு ஆபத்தாகுமென்று ஜனதிபதி அயூப்கான் கூறினுர்.

“காஷ்மீருக்கு நியாயம் கிடைக்கும்வரை நாம் ஓயமாட்டோம்” என்று கூறிய மார்ஷல் அயூப்கான் “நேரு சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிருர்” என்ருர்.

## உ. பி. யில் எண்ணை கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஜுலை 30

உத்தரப்பிரதேசத்தில் ஷாஜஹான்பூருக்கருகில் பெருமளவில் எண்ணை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

## குரு பூரணை விழா

### நல்லூரில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

திவ்விய ஜீவன சங்கத்தினுல் குரு பூரணை விழா கடந்த வியாழக்கிழமை நல்லூர் வைகுந்த கைலாஸ் ரமணி அஞ்சலி ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவுக்கு யாவட்ட உதவி நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் தலைமை வகித்தார். சங்கத்தின் உப போஷகர் சுவாமி சுப்பிரமணியானந்தா அவர்களையும் வரவேற்று உரை நிகழ்த்தினுர்.

சங்கச் செயலாளர் திரு. எஸ். கனகரத்தினம் “தேக சுகம்” என்பது பற்றியும், வழக்கறிஞர் எஸ். சூரசங்காரம் “நான் ஏன் இங்கு வந்தேன்” என்பதுபற்றியும் உரைநிகழ்த்தினர். கூட்டுப் பிரார்த்தனையும் யோகாப்பியாசங்களும் பின்னர் நடைபெற்றன.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.



### தேவை

பிடவை வியாபார அனுபவமுள்ள (Salesman) விற்பனையாளர்கள் தேவை. டயரும்ஸ், 54, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.


## ORDER NISI

In the District Court of JAFFNA.

In the matter of the intestate estate of the late Sithambaram widow of Vaitilingham of Mandaitivu. Deceased.

Testamentary Jurisdiction No. 980.

Vaitilingam' Kanapathipillai of Mandaitivu Jaffna. Petitioner.

vs

1. Kathiravelu Kanagasa ba and wife.
2. Visaladchy both of Mandaitivu Jaffna. Respondentsi

This matter coming on for disposal before N. Krishnadasan Esquire District Judge Jaffna on the 18th day of May 1961 in the presence of Mr. M. M. Sultan Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated the 17th of May 1961 having been read; It is ordered that the petitioner be declared entitled to have Letters of administration to the estate of the said intestate as her sole heir and son and directing that such Letters of administration be issued to him accordingly-unless the Respondents or any other persons interested shall appear before this court on or before the 5th day of July 1961 and state objection or show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Jaffna this 18th day of May 1961.

Sgd. N. Kirshnadasan,
*District Judge, Jaffna.*

This Order Nisi is extended till 4—8—61.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர்
கைலாசபிள்ளையார் கோவிலடி
யாழ்ப்பாணம்.


### அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவைச் சித்திவிநாயகர் ஆலய (கட்டிட) திருப்பணிக்கு பணம் உதவியவர்களின் விபரமும் கும்பாபிஷேகத்திற்கும் தொடர்ந்து விழாக்கள், அபிஷேகங்கள் செய்வதற்கும் பணஉதவி செய்தவர்களின் முழுவிபரமும் சகல செலவு விபரங்களும் மண்டலாபிஷேகம் முடிந்த சில நாட்களுக்குள் புஸ்தக வடிவில் வெளியிடப்படும் என்பதை அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இ. விக்னராசா
ஷ ஆலய பரிபாலனக் காரியதரிசி

### பிரதமருக்கு காரியதரிசி
### மீண்டும் பதவி ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

பிரதமருக்குக் காரியதரிசி ஒருவர் வேண்டியதில்லையெனக் கருதி அப்பதவியைக் காலஞ் சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956-ல் ரத்துசெய்திருந்தார். இப்போது மீண்டும் இப்பதவியை ஏற்படுத்தி அதற்காக ஆண்டுக்கு ரூ. 10,020—16,200 ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வருடம் ஒன்றுக்கு ரூபா 10,707 சம்பளத்துடன் பிரதமருக்கு அந்தரங்க காரியதரிசி ஒருவரை நியமிப்பதென ஏற்பாடாகியுள்ளது. அத்துடன் பிரதமரின் உபயோகத்துக்கு ரூ. 28.000 செலவில் கார் ஒன்றும் கொடுப்பதாக 1961—62 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

திரு. பி. நடேசன் பிரதமரின் காரியதரிசிப் பதவியைக் கடைசியாக வகித்து வந்தார். இவருக்குப்பின் இவ் வேலை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் கடமைகளுடன் இணைக்கப் பட்டுவிட்டது. திரு. நெவெல் கனகரத்னு கடமையாற்றிய ஐ. நா.வின் முதல் காரியதரிசிப் பதவியும், திரு. கே. கனகசுந்தரம் லண்டனில் கடமையாற்றிய உபதூதர் பதவியும், இப்போது நீக்கப்பட்டு விட்டன.

# நடுத்தர வகுப்பினருக்கு பெரும் சுமை!
## வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும்
### வரவு-செலவுத் திட்டம்பற்றி யாழ்ப்பாணத்தில் நிலவும் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் பற்றி யாழ்ப்பாணத்தில் பொதுவாக நிலவும் அபிப்பிராயத்தை இங்கு நமது நிருபர் தருகிறார்:-

தோட்டச் சொந்தக்காரரான திரு. டபிள்யு. எம். குமாரசாமி புதிய வரவு செலவுத் திட்டம் பற்றி பின்வருமாறு கூறினர்:-

புதிய வரவு செலவுத் திட்டம் ஏழை மக்களுக்கு நன்மை செய்கிறதென்பதில் ஐயமில்லை. ஆனல் மத்தியதர மக்களுக்குப் பெரும் சுமையைக் கொடுக்கிறது. மத்தியதர வகுப்பினரின் தயவிலுள்ள ஏழைகளை இது மறைமுகமாய் பாதிக்கும்.

தோட்டத் தொழில் குறிப்பாக வரண்ட பிரதேசத்திலுள்ள தோட்டத் தொழில் நிச்சயமாகப் பாதிக்கும் வருமானவரி, ஏக்கராவரி, போன்றவரிகள் தோட்டங்களில் எங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தை எடுத்து விடும். எனவே மீண்டும் மரங்களை நடவோ தோட்டங்களை அபிவிருத்தி செய்யவோ எதுவும் மிஞ்சாது.

#### வாழ்க்கைச் செலவு உயரும்

திருமதி டபிள்யு. எம். எஸ். தம்பு பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:—

மாவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாண் விலையும் மற்றும் மாவில் செய்யப்படும் பதார்த்தங்களின் விலையும் அதிகரித்துவிடும். வாழ்க்கைச் செலவை இது அதிகரிக்கக்கூடும். உணவு, உப உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்காமலிருக்க அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உணவுப் பொருள்களின் விலைகளை நிர்ணயிக்க வேண்டிய சமயம் வந்துவிட்டது. மீன், மரக்கறிகள் கூட ருத்தல் முறையில் விற்கவும் விலை நிர்ணயிக்கவும் வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டது.

வர்த்தகரும் சமூக ஊழியருமான திரு. எம். குமாரசாமிப்பிள்ளை புதிய வரவு செலவுத் திட்டம் பற்றி பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தார்.

உள்நாட்டில்உற்பத்திசெய்வதற்காகஉடனடிவசதிகளைச் செய்துகொண்டுதான் இறக்குமதிப்பொருள்கள் மீதுகட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும். பெரிய தொழில்களை ஆரம்பித்தால் மட்டும் போதாது. சிறு சிறு கைத் தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட வேண்டும். சிறு கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் பெருந் தொகையானவர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்யும்.

ஓய்வு பெற்ற ஒரு அரசாங்க ஊழியரான திரு. கே. கே. அம்ரோஸ் கருத்துத் தெரிவிக்கையில் "வரிச்சுமை சாதாரண பொது மக்கள் மீதே சுமத்தப்பட்டுவிடும். இதனல் வாழ்க்கைச் செலவு உயரும்" என்று கூறினர்.

### ஏற்புக் கண்ட யானை குணமடைந்து வருகிறது

திருக்கோணமலை, ஞாயிறு

சுமார் ஆறு வாரங்களுக்கு முன்னர் திருக்கோணமலையில் பிடிக்கப்பட்ட நாலு கால்களையும் கழுத்தையும் சங்கிலியாற் பிணைத்து வைத்திருந்த யானைக்கு ஏற்புக் கண்டிருந்தது. இப்போது குணமடைந்து வருகிறது.

மிருகக் காட்சி அதிகாரி மேஜர் ஒபரி வின்மன் பனிக்கன் முகமதுவை நோயற்ற யானையைப் பார்வையிட அனுப்பியிருந்தார். அவர் அதை இரண்டு வாரங்களாகக் கவனித்த போதிலும் நோயின் காரணத்தைக்கண்டுபிடிக்க முடியவில்லை. யானை தனது துதிக்கையால் முன் காலைத் தடவுவதைக் கண்டு அந்தக் காலைப் பரிசோதனை செய்த போது நாலு அங்குல நீளமுடைய துருப்பிடித்த ஆணி ஒன்று ஏறியிருந்தது தெரியவந்தது. அகற்றிய பின்னர் யானை நன்கு குணமடைந்து வருகிறது.

### படை குறைப்புத் திட்ட நிபுணர்

வாஷிங்டன், ஜூலை 30

அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் படைகுறைப்புத்திட்ட நிபுணர் திரு. ஜோன் மக்ளோய் மாஸ்கோவில் சோவியத் பிரதமர் குருஷ்சேவுடன் படைகுறைப்பு சம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி திரு. கென்னடியிடம் தெரிவிப்பதற்காக மாஸ்கோவிலிருந்து வாஷிங்டனுக்குப் புறப்பட்டார்,

படைகுறைப்பு சம்பந்தமாக அமெரிக்க, ரஷ்யப் பிரதிநிதிகளுக்கிடையில் மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எவ்வித முடிவுமின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கொள்ளையடித்ததாக வழக்கு அப்பீலில் தண்டனை உயர்வு

சாவகச்சேரி, ஞாயிறு

சட்டவிரோதமாகக் கூடியதாகவும் கச்சாயைச் சேர்ந்த செல்வி பசுபதி செல்லையாவினதும் திருமதி நாகம்மா செல்லையாவினதும் வீட்டைக் கொள்ளையடித்ததாகவும் இரு பெண்களுக்கும் காயமுண்டு பண்ணியதாகவும் குற்றம் சாட்டி கச்சாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவகுரு, சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து கந்தையா, செல்லையா சுப்பிரமணியம், மட்டுவில் தெற்கைச் சேர்ந்த விசுவன் தாமோதன் ஆகியோர் மீது சாவகச்சேரிப் பொலிசார் தொடர்ந்து வழக்கு சாவகச்சேரி நீதவான் திரு. லடுவஹெட்டி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின் எதிரிகள் நால்வருக்கும் தலா இரண்டு வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் நால்வரும் அப்பீல் செய்திருந்தனர். அப்பீலில் 300 ரூபாய் அபராதம் நீக்கப்பட்டு மேலும் ஒன்பது மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

### அல்ஜீரிய பேச்சு வார்த்தை முறிந்தது

பாரிஸ், ஜூலை 30

ஈவியான் நகருக்கருகில் பிரான்சுக்கும் அல்ஜீரிய தேசியத் தலைவர்களுக்குமிடையில் அல்ஜீரியாவின் எதிர்காலம் பற்றி நடைபெற்றுவந்த பேச்சிவார்த்தை முறிந்துவிட்டது.

அல்ஜீரிய பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதால் அல்ஜீரியாவில் பலாத்கார சம்பவங்கள் நிகழக்கூடுமென்று எதிர்பார்த்து அதைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் பிரஞ்சு அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அல்ஜீரிய நிலைமை பற்றி ஜனதிபதி டிகோலின் தலைமையில் நேற்றுக் கூடிய தேசிய பாதுகாப்புக் கமிட்டி பரிசீலனை செய்தது.

### 2 மாதச்சிறை

சாவகச்சேரி, ஞாயிறு

கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். தங்கம்மா என்பவர் பகலில் நித்திரை செய்துகொண்டிருந்த சமயம் ஆபிரகாம் எனப்படும் அந்தோனிப் பிள்ளை ஆறுமுகம் என்பவர் பல பொருட்களைக் களவாடியதாகக் குற்றஞ் சாட்டி சாவகச்சேரிப் பொலிஸார் தொடர்ந்த வழக்கில்சாவகச்சேரி நீதவான் எதிரிக்கு இரண்டு மாதக் கடுழியச்சிறைத் தண்டனை விதித்ததுடன் ஒருவருடப் பொலிஸ் கண்காணிப்பிலிருக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.


### இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு

நாடகப்போட்டி - 1961

பல நாடகாசிரியர்களது வேண்டுகோளுக்கிணங்கப் போட்டி முடிவு தினம் 15-8-61 ஆக மாற்றப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

கலைக்கழகம்,
கொழும்பு, 25-7-61.

கலாநிதி சு. வித்தியானந்தன்
தலைவர், தமிழ் நாடகக்குழு





வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# பிஸர்ட்டா நிலைமையை ஆராய ஐ. நா. பொதுசபைகூடவேண்டும்

## லைபீரியா கோரிக்கை

### டூனிஷியாவுக்கு அரபுக் குடியரசு ஆயுத உதவி அளிக்கும்

நியுயோர்க், ஜூலை 30

பிஸர்ட்டா நிலைமைபற்றி விவாதிக்க ஐ. நா. பொதுச் சபை கூட வேண்டுமென்று லைபீரியா கோரியுள்ளது.

பிஸர்ட்டா நெருக்கடி காரணமாக டூனிஷியாவுக்கு உடனடியாக உதவி புரிவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு ஆயுத உதவி அளிக்கத் தீர்மானித்திருப்பதாக கெய்ரோவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஸர்ட்டா நிலைமை சம்பந்தமாக ஆராய்வதற்காக மீண்டும் கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை, புதிய தீர்மானம் எதையும் மேற்கொள்ள முடியாமல் காலவரையறையின்றி கூட்டத்தை ஒத்திவைத்தது.

பிஸர்ட்டாவில் பிரஞ்சுப் படைகளும், டூனிஷிய படைகளும் உடனடியாக சண்டையை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சண்டைக்கு முன்னர் இருந்த நிலைகளுக்கு இருதரப்புப் படைகளும் திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்றும் பாதுகாப்புச் சபை முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்துக்கிணங்க பிஸர்ட்டாவில் சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால் இருதரப்புப் படைகளும் பழைய நிலைகளுக்குத் திரும்பிவிட வேண்டுமென்ற தீர்மானத்துக்கிணங்க பிரஞ்சுப் படைகள் நடந்துகொள்ள வில்லையென்றும் இதுபற்றிப் பாதுகாப்புச்சபை மீண்டும் ஆராய வேண்டுமென்றும் டூனிஷியா கேட்டுக் கொண்டதற்கிணங்க சபை நேற்று மீண்டும் கூடியது.

நேற்றைய கூட்டத்தில் லைபீரியா, ஐக்கிய அரபுக் குடியரசு, இலங்கை ஆகிய நாடுகள் மூன்று தீர்மானங்களையும் துருக்கி ஒரு தீர்மானத்தையும் கொண்டு வந்திருந்தன.

இந்த மூன்று தீமானகங்ளுக்கும் போதிய வாக்குகள் கிடைக்காததினால் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

பிஸர்ட்டா நிலைமை உலக சமாதானத்துக்கு ஆபத்து உண்டாக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் பிஸர்ட்டாவிலிருந்து பிரெஞ்சுப் படைகளை விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று லைபீரியா, ஐக்கிய அரபுக் குடியரசு, இலங்கை ஆகிய நாடுகள்கொண்டு வந்த இரு தீர்மானங்களும் வற்புறுத்தின. இந்தத் தீர்மானத்தை சோவியத் ரஷ்யாவும் ஆதரித்தது.

டூனிஷியாவின் பிரதேச உரிமையை மதித்து பிரஞ்சுப் படைகளை அங்கிருந்து விலக்கிக் கொள்வதற்கு இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முயற்சி செய்ய வேண்டுமென்று துருக்கி கொண்டுவந்த தீர்மானம் கூறியது. இதை அமெரிக்காவும் ஆதரித்தது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை முதலில் பகிஷ்கரித்த பிரஞ்சுப் பிரதிநிதி பாரிசிலிருந்து உத்தரவு கிடைத்தபின் கூட்டத்தில் கலந்து கொண்டார். வாக்களிப்பில் பிரான்ஸ் கலந்து கொள்ளவில்லை

சபையின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட சமயம், தீர்மானமெதுவும் நிறைவேறாமல் போனதற்காக சபைத் தலைவர் வருத்தம் தெரிவித்துக் கொண்டார். பாதுகாப்புச் சபையின் பழைய தீர்மானம் இன்னும் அமுலில் இருக்கிறதென்பதைத் தலைவர் நினைவூட்டினார்.

பாதுகாப்புச் சபை பிஸர்ட்டா சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாமலிருப்பதால் பிஸர்ட்டா நிலைமை குறித்து ஒரு முடிவு காண்பதற்காக ஐ. நா. பொதுச் சபையின் அவசரக் கூட்டமொன்று கூடவேண்டுமென்று இதர ஆசிய ஆபிரிக்க நாடுகளுடன் சேர்ந்து லைபீரியா கோருமென்று லைபீரியப் பிரதிநிதி தெரிவித்தார்.

# கலப்பு அரசாங்கம் அமைக்க

### காங்கோ பார்லிமெண்ட் சம்மதம்

## கமிட்டாட்டு புதிய பிரதமராவார்?

லியப்போல்ட்வில்லி, ஜூலை 30

லியப்போல்ட்வில்லிக்கு அருகிலுள்ள பல்கலைக்கழகக் கட்டிடத்தில் ஆரம்பமாகியுள்ள காங்கோ பார்லிமெண்ட் கூட்டம் காங்கோவில் ஒரு தேசிய கலப்பு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கும் நிர்வாக அதிகாரப் பொறுப்பை பகிர்ந்துகொள்வதற்கும் ஸ்டான்லிவில்லி மாகாணத்தலைவர்களும் லியப்போல்ட் வில்லி தலைவர்களும் இணங்கிவிட்டனர். பிரதம மந்திரியாக யாரைத் தெரிவு செய்வது என்பதில் தான் இன்னும் இணக்கம் ஏற்படவில்லையென்று தெரிகிறது.

லியப்போல்ட்வில்லி மாகாணத்தின் கவர்னர் கமிட்டாட்டு புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்படக் கூடுமென்றும் கூறப்படுகிறது. பிரதமர் பதவியை ஏற்க திரு. கமிட்டாட்டு மறுக்கக் கூடுமென்றும் தெரிகிறது.

காங்கோ பார்லிமெண்ட்கூட்டத்தில் கடாங்கா மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பழைய பிரஞ்சு காங்கோவின் நகரில் கஸவுபுவும் ஷோம்பேயும் விரைவில் சந்தித்துப் பேசுவார்களென்று இன்று அறிவிக்கப்பட்டது.

## லால்குடியில் சீனி ஆலை

திருச்சி, ஜூலை 30

லால்குடியில் ஒரு புதிய சீனி ஆலை நிறுவப்படவிருக்கிறது. இந்த ஆலைக்கான கட்டடத்தின் அஸ்திவாரக்கல்லை தமிழ் நாடு முதன்மந்திரி திரு கே. காமராஜ் நேற்று நாட்டினார்.

இந்த ஆலை சீனி உற்பத்தி செய்ய ஆரம்பித்ததும் பத்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்.

இந்த ஆலைக்குத்தேவையான கரும்புகள் ஆறுயிரம் ஏழாயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படவிருக்கிறது.

---

## மதகுருமாருக்கு விசேஷ ஒழுங்குகள்

பாணந்துறை, வெள்ளி

பாணந்துறை ஓ. பி. டி. ஆஸ்பத்திரியில் மருந்து பெறுவதற்கு இனிமேல் மதகுருமார்கள் வரிசையில் நிற்கத்தேவையில்லை.

மதகுருமார்கள் வரிசையில் நிற்காமலே ஓ. பி. டி.யில் மருந்து பெறுவதற்கான ஒழுங்குகளை பாணந்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி. புளெடி செய்துள்ளார்.

# ஜப்பானிய மீன்பிடி நிபுணர் கோஷ்டி

## யாழ்ப்பாண கரையோர பகுதிகளுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்கொழும்பில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மீன்பிடிப்பயிற்சி கழகத்தில் பயிற்சி அளிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஜப்பானிய மீன்பிடி நிபுணர் கோஷ்டி யாழ்ப்பாணத்துக்கு வந்து வட பகுதிக் கரையோரப் பகுதிகளையும் பார்வையிட்டது.

சனிக்கிழமை யாழ்ப்பாணப் பகுதிகளிலும், ஞாயிற்றுக் கிழமை வட மாகாணத்தின் கரையோரப் பகுதிகளுக்கும் சென்று, பார்வையிட்ட இக் கோஷ்டி, இவ்விடங்களில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வது பற்றி ஆராய்ந்தது.

யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மன்னர், மட்டக்களப்பு வவனியா ஆகிய இடங்களுக்கும் இக் கோஷ்டி சென்று பார்வையிட்டது.

இலங்கையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய ஆரம்பிக்கவிருக்கும் மீன்பிடிப் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி அளிக்க வந்திருக்கும் இவர்கள் ஜப்பானிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்டுள்ளனர் இவர்கள் இங்கு மூன்று வருடங்கள் தங்கியிருப்பர். மீன்பிடி என்ஜினியர் இருவர், மீன்பிடி தொழில் நிபுணர்கள் மூவர், மொழிபெயர்ப்பாளர் ஒருவர் ஆக ஆறுபேர் கொண்டது இக் கோஷ்டி.

மீன்பிடி பயிற்சிக் கழகத்தில் மீன் பிடித் தொழிலில் ஈடுபாடுடைய தொழிலாளர்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படுவார்கள்.

நீர்கொழும்பில் பயிற்சிக் கழகத்தின் கட்டட வேலைகள் முடிவடையவில்லை என்று தெரிய வருகிறது. முன்னடியே இலங்கை வந்திருக்கும் இக் கோஷ்டி கட்டடம் பூர்த்தியாகிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் பயிற்சி அளிப்பதில் ஈடுபடுவர். இன்று இக் கோஷ்டியினர் கொழும்பு திரும்புகின்றனர்.

---

## விமானம் மூலம் மருந்து தெளிப்பு

சென்னை, ஜூலை 27

வேர்க்கடலைப் பயிருக்கு வருடா வருடம் பெரும் சேதம் விளைவித்து வரும் சிகப்பு ரோமம் உள்ள கம்பளிப் பூச்சி ஒழிப்புக்காக பொள்ளாச்சி தாலுகாவில் இந்த ஆண்டு மே மாதத்தில் சுமார் 8,200 ஏக்கர் பரப்புள்ள நிலங்களில் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது.

இந்த மருந்து தெளிப்பு மாநிலத்தில் ஓர் பூர்வாங்க வேலைத் திட்டமாக ரூ. 90 ஆயிரம் செலவில் நடைபெற்றது. விமானங்கள் மூலமே மருந்து தெளிக்கப்பட்டது,

---

## 29,000 ஜேர்மனியர்

வாஷிங்டன், ஜூலை 30

கிழக்கு ஜேர்மனியிலிருந்து 29,000 மக்கள் வெளியேறி மேற்கு ஜேர்மனிக்குள் சமீபத்தில் வந்துசேர்ந்ததாக வாஷிங்டன் ரேடியோ தெரிவித்தது.

## உலக ஆசிரியர் சம்மேளனம்

புதுடில்லி, ஜூலை 30

அகில உலக ஆசிரியர்சம்மேளனத்தின் மகாநாடு ஆகஸ்ட் மாதம் முதல் திகதி செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகிறது. இந்த மகாநாட்டை பிரதம மந்திரி நேரு ஆரம்பித்து வைப்பார்.

காந்திஜீயின் ஆதாரக் கல்வித்திட்டம்பற்றியும் இந்தமகாநாடு ஆராயும்.

---

## "உணவு உற்பத்தியை பாதிக்காது"

பங்களூர், ஜூலை 30

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட ராஜ்யங்களின் உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்க கூடிய உணவு கையிருப்பிலுள்ளது என்று மத்திய அரசாங்க விவசாய இலாகா துணைமந்திரி திரு. கிருஷ்ணப்பா தெரிவித்தார்.

ராஜ்யங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மொத்த உணவு உற்பத்தியைப் பாதிக்காது என்றும் திரு கிருஷ்ணப்பா கூறினர்.

---

## தேசிய சீன உப-ஜனாதிபதி

### வாஷிங்டன் பிரயாணம்

தைப்பே, ஜூலை 30

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் அழைப்பின் மீது கென்னடியைச் சந்தித்துப்பேசுவதற்காக தேசிய சீன உதவி ஜனாதிபதியும், வெளிவிவகார மந்திரியும் இன்று தைப்பேயிலிருந்து வாஷிங்டனுக்குப் பிரயாணமானர்கள்.

கம்யூனிஸ்ட் சீனவுக்கு ஐ நா. வில் இடமளிப்பது வெளிமங்கோலியாவுக்கு ஐ. நா. வில் இடமளிப்பதுபற்றி இவர்கள் ஜனாதிபதி கென்னடியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பார்லிமெண்ட் தூதுகோஷ்டிக்கு குருஷேவ், டிட்டோ அழைப்பு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை பார்லிமெண்ட் தூது கோஷ்டிக்கு, சோவியத் பிரதமர் குருஷ்சேவும் யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவும் அழைப்பு அனுப்பியுள்ளனர்.

இரண்டு அழைப்புக்களையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பார்லிமெண்ட், செனட்சபை அங்கத்தவர்கள் சிலரைக் கொண்ட இரண்டு தூது கோஷ்டிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த இரு கோஷ்டிகளும் செப்டம்பர் மாதத்தில் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்பது எம். பி. க்களும் மூன்று செனட்டர்களும் கொண்ட ஒரு கோஷ்டி ரஷ்யாவுக்குச் செல்லும்.

ஒரு தூதுகோஷ்டிக்கு ஜனப் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொலையும் மற்றக்கோஷ்டிக்கு செனட் சபைத் தலைவர் சேர் சிரில் டி' சொய்சாவும் தலைமை தாங்குவார்கள்.

லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டுக்கு திரு. ஸி. பி. டி' சில்வா தலைமையில் நான்கு எம்.பி.க்களைக்கொண்ட ஒரு கோஷ்டி புறப்பட்டுச் செல்லும் இக்கோஷ்டிகளில் முக்கிய அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கும்.

நிதிமந்திரிகள் மகாநாட்டிலும் பின்னர் வாஷிங்டனில் நடைபெற விருக்கும் உலக வங்கி மகாநாட்டிலும் கலந்து கொள்வதற்காக நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா செப்டம்பர் மாதத்தில் இலங்கையிலிருந்து புறப்படுவார்.

## 'நொக்அவுட்' உதைபந்தாட்டப் போட்டி

### ஆகஸ்ட்மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

பெப்ரவரி மாதம் திடீரென ஒத்திவைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்கத்தின் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியை மீண்டும் தொடர்ந்து நடத்துவதென இச் சங்கம் தீர்மானித்துள்ளது.

கல்வி இலாகா, மாநகர சபை, மின்சார இலாகா, சிறை இலாகா, பாதுகாவல் குற்றவாளிகள் பாதுகாவல் இலாகா, தபால் பகுதி ஆகியவற்றுக்கிடையே ஆகஸ்ட்மாதத்தில் இந்த உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். இப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. வெள்ளிக் கிண்ணத்துக்கான இப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறுகின்றது.

இச் சங்கத்தின் தலைவர் திரு. ஏ. ஏ. குக் இறுதி நாளன்று தலைமை தாங்கி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார்.

---

வார்தா, ஜூலை 30

வகுப்புவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட ஒரு கூட்டு முன்னணி அமைக்கப்படவேண்டும். என்று இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மத்திய குழு உறுப்பினரும் எம். பி. யுமான திரு. அஹமத் தெரிவித்தார்.

## மணிவாக்கு

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாது நினைப்பவர் இன்பவாழ்வில் நிலைத்து வாழ்வார்.

— வள்ளுவர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 16உ (31-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தேசியஅபிவிருத்திவரி

மாதம் ரூ. 300க்கு மேல் சம்பளமோ அல்லது வருமானமோ உள்ளவர்கள், கட்டாயமாக 4 சத விகிதம் தேசிய அபிவிருத்தி வரி செலுத்த வேண்டுமென்று நிதிமந்திரி பட்ஜட் பிரசங்கத்தில் அறிவித்தார். இதன் மூலம் எவ்வளவு வருமானத்தை எதிர்பார்க்கிறாரென்பதை அவர் தெரிவிக்கவில்லை.

அரசாங்கம், வர்த்தக ஸ்தாபனம் இவற்றில் வேலை பார்ப்பவர்கள் பலருக்கு ரூ 300க்கு மேல் சம்பளமிருக்கும். குழந்தைகளும் குடும்பப் பொறுப்புமில்லாதவர் இந்த வரியைச் சுலபமாகச் செலுத்தக்கூடும். ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து, கிடைக்கும் வருமானம் குடும்பச் செலவுக்கும் போதாமல் கடன் வாங்கி ஜீவனம் நடத்துபவர்களுக்கு இந்தப் புதிய வரிப்பளுவு அதிக இம்சையாக இருக்கும். வருமானவரி வசூலிப்பதில் குழந்தைகள் முதலியவர்களுக்காகக் கழிவு கொடுப்பது போல், குழந்தைகளிருப்பவர்களிடம் இந்தத் தேசிய அபிவிருத்தி வரியை வசூலிக்காமல் அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டியது அவசியமாகும்.

சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கையில், டாக்டர்கள், அப்புக்காத்துகள, இஞ்சினீயர்கள் முதலியவர்களுக்கு வருடத்தில் ஐயாயிரம் பத்தாயிரம் என்று தொழில்வரி விதிக்கப்போவதாக அறிவித்தார். அவர்கள் கட்டுப்பாடாகச் சேர்ந்து ஆட்சேபித்தார்கள். நிதிமந்திரி பின்னர் அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டார். ஆனால் இப்போது, மாதம் ரூ 300 சம்பளக்காரருக்கும் உள்ளிட்டு இவ்வரியை விதித்துள்ளார். புதிய வரி விதிப்பால் சங்கடப்படக் கூடியவர்கள், கட்டுப்பாடாகத்தங்கள் நிலைமையைத் தெளிவாக விளக்கினால் நிதிமந்திரி இவ்விஷயத்தில் புனராலோசனை செய்வாரென்றே நம்புகிறோம்.

இலங்கை வங்கியைத் தேசியமயமாக்கியதாயினும், வருமானத்துக்கு ஓர் உச்சவரம்பு ஏற்படுத்தியுள்ளதாலும், அரசாங்கத்துக்கு புதிதாக அதிக வருமானம் கிடைப்பதுடன், தேசிய அபிவிருத்தி வேலைகளுக்கு பணம் தாராளமாகக் கிடைக்கலாம். ஆகவே சீனி, தீப்பெட்டி முதலிய மக்களின் அன்றாட தேவைக்கான பொருள்களின் விலைவாசிகளை அரசாங்கம் அதிகரிக்கத் தேவையில்லை. வாழ்க்கைச் செலவைக் குறைக்க முனைவதாகக் கூறும் அரசாங்கம் இப்பொருள்களின் விலைகளை உயர்த்தக் கூடாது. அப்படி உயர்த்துவதால் மக்கள்மேலும் அதிருப்தியடையவும் அதனால் தேசிய அபிவிருத்திக்கான வேலைகள் பாதிக்கப்படவும் கூடும்.

—

## இ. இந்தியர் சங்கடம்

"இலங்கையிலுள்ள இந்தியர்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கவே இங்கு இந்திய ஹைகமிஷனர் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இங்குள்ள வேதாரண்ய குருக்கள் மார்கள் முதலிய எளிய இந்தியருக்கும் ரூ. 400 விஸாவரி விதித்து அவர்களை கட்டாயமாக வெளியேற்ற முற்பட்டிருப்பதுபற்றி இந்திய ஹைகமிஷனர் என்ன செய்கிறார்? ஏற்கெனவே இங்குள்ள இந்தியர் தொடர்ந்து தடையின்றித் தொழில் செய்யலாமென்று முன்னர் பெரிய சேனநாயக்கா நேருஜிக்கு வாக்குறுதி அளித்துள்ளார். மேலும் இது மனிதர்களைப் பற்றிய பிரச்சினை. மனிதாபிமானத்துடன் இதை கவனிக்க வேண்டுமென்று இந்திய ஹைகமிஷனர் கேட்டால், பிரதமர் சிறிமா அதை மறுக்க மாட்டார் என நம்புகிறேன்" என்று இலங்கையிலுள்ள ஓர் இந்தியா எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் மேலான நல்லுறவு இருப்பதாலும், இது மனிதர் பற்றிய பிரச்சினையாதலாலும், இரு அரசாங்கங்களும் இதைப்பற்றிக் கவனித்து, எளிய மக்களுக்கு வீண் இம்சை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்றேல் இருநாடுகளுக்கும் நல்லெண்ணம் இருப்பதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.

# 'வாழ்வுக்கு ஒளியூட்டுவது உயர்ந்த எண்ணங்களே'

## சுவாமி சிவானந்தரின் விசேஷ செய்தி

**சென்ற வாரம் 27-ந் திகதி குருபூர்ணிமை, யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய பல இடங்களிலும் திவ்யஜீவன சங்கத்தாரால் பக்தியுடன் கொண்டாடப்பெற்றது. அச்சமயம், ரிஷிகேசத்திலுள்ள சுவாமி சிவானந்தர் அனுப்பிவைத்துள்ள இந்த விசேஷ செய்தி படிக்கப்பட்டது.**

ஒரு விண்மீனைப் படைத்து வானவீதியில் வலம்வர விடுவதைவிட, உயர்ந்த எண்ணமொன்றைக் காலவெள்ளத்திற் கலக்கவிடுவது தெய்வ நோக்கில் அதிக சிறப்புவாய்ந்ததாகக் கொள்ளப்படும். எண்ணத்தின் சக்தியால் சாதிக்கக்கூடிய அதிசயங்களை உலகம் இன்னும் காணவேண்டியிருக்கிறது. இதனால் இச்சக்தியின் மதிப்பை நாம் குறைவாகவே கணிக்கிறோம். மனிதனுக்கு மிகமுக்கியமானதாக விளங்கும் இத்துறையில் இன்னும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, சரியான எண்ணங்களைப் பெறுவதற்கான வழிவகைகளை நாம் நாடியறிவது நலம்.

பண்டைக்கால முனிவர்கள், எண்ணங்களின் உண்மைத் தன்மையைக் கண்டறிந்தார்கள். எக்காலத்திலும், அனேகமாக எந்நாட்டிலுமே காணப்படாத ஆன்மீக ஆற்றலும் அறிவும் அவர்களிடம் இருந்தன. ஓரிடத்தும் நிலைகொள்ளாமற் பாயும் எண்ணங்களின் சலிக்கும் தன்மையை அவர்கள் தியானத்தின்போது திறமையுடன் வென்று, மனோலயத்தின் மூலம் தெய்வீக உணர்வு பெற்றனர். அவர்கள் உறுதியான கோட்பாடுகளைக் கொண்டவர்கள். தங்கள் பார்வையைக் கண்ணுக்குப் புலப்படாத சூக்கும உலகை நோக்கிச் செலுத்தும் வல்லமையும் அவர்களிடம் இருந்தது. அதியுன்னதமான சத்தியப் பொருளின் ஆதிக்கத்தில் அவர்கள் வாழ்ந்தனர். எனவே, தங்களது சமயம் தங்களுக்கு வலிமையும் மேன்மையும் அளிப்பதை அவர்கள் உணர்ந்ததில் வியப்பில்லை. அவர்களுடன் வாழ்ந்த மாந்தர் பலர் அவர்களது கொள்கைகளை விரும்பி ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் அம்முனிவர்களின் கோட்பாடுகள் வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலன்றிப் பூரண அறிவின் விளைவாக எழுந்தவை. எல்லா உயிர்களிலும் உறையும் மெய்ப்பொருளை அவர்கள் தமது இதயத்தில், உயிரின் உயிராகவும் மூச்சின் மூச்சாகவும் உணர்ந்தனர். அவர்களது காட்சிக்கும் கேள்விக்கும் புலனான விசித்திரங்கள் பல. மனித எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட இன்பநிலையில் அவர்கள் இரண்டறக் கலந்தனர். இவ் வனுபவங்கள் அவர்களது தெய்வீகப் பேறுகளை உறுதிப்படுத்துகின்றன. அறிவானது தூய்மை பெறும்போது, மனிதனது முழுத் தன்மையும் தூய்மையடைகின்றது. ஞாபகசக்தி உறுதி பெறுகின்றது. ஆன்மீகநினைவு உறுதியாய் நிற்கும்போது, பிற பிணைப்புகள் தளர்கின்றன. இத்தகைய கருத்துக்கள் மனிதரிடையே சிறிது சிறிதாகப் பரவிவந்துள்ளன. ஆன்மீக ஆற்றல் அதிகரிக்கும்போது மக்கள் இவற்றை இன்னும் அதிகமாக விரும்பியேற்பர். எனினும், ஒரு இலட்சியத்துக்காகத் தம்மையே அர்ப்பணிக்கும் ஆற்றல் சிலருக்கே உண்டு. ஏனெனில், இது மிக உயர்ந்ததும் பெறற்கரியதுமான ஒருபேறு ஆகும்.

தற்கால உலகில், அழிவுப் பாதையிற் செல்லும் ஆராய்ச்சி முறைகளின் விளைவுகளிடையே, சிரத்தையுள்ள மக்களின் இதயங்களிற் புதியதோர் ஒளிதோன்றியுள்ளது. எண்ணங்களின் ஆட்சித் திறனை நாம் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடிய நாள் அருகிலுள்ளது. அதாவது, வேறுவிதமாகக் கூறினால், நாம் எதனுடைய பிரதிநிதிகளாக உள்ளோமோ அந்த அடிப்படைப் பொருளான சத்தியத்துடன் எமக்குள்ள தொடர்பை நாம் விரைவில் உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். இந்நுட்பமான மனோசக்தியின் விளைவுகள் மகத்தானவை. வாழ்க்கையிலே மிக அற்பமான சம்பவத்திலிருந்து அதிமுக்கியமான காரியம் வரை, யாவற்றிலும் எண்ணங்களின் ஆற்றல் பயன்படுகின்றது. எந்த அளவுக்கு இச்சக்தி ஆன்மீகத்தன்மை பெறுகின்றதோ, அந்த அளவுக்கு வலிவும் தீவிரமும் அடைகின்றது. உயர்ந்த எண்ணங்கள் எமது வாழ்வுக்கு ஒளியூட்டுகின்றன. அவை எம்மிடம் உயர்ந்த பண்புகளைத் தோற்றுவித்து, அறிவுச்சக்திகளைத் தூய்மைப் படுத்தி, அவற்றைப் படிப்படியாக ஆன்மாவுடனும், உண்மையும் அழகுமான யாவற்றுடனும் இணைத்து, ஆன்மீகத் தன்மையை அளிக்கின்றன. எண்ணங்களுக்கு ஆக்கத்தன்மை உண்டு; அவை எமது செயல்களுக்கு முன்னோடியாய் விளங்குபவை என்ற உண்மையை உணர்ந்து நினைவிற் கொண்டால், இக்கூற்று மிகைப் படுத்திக் கூறப்பட்டதன்று என்பது விளங்கும். நல்ல எண்ணங்கள், நல்ல பலன்களை விளைவிப்பதோடு, அத்தகைய எண்ணங்களுள்ள உயிர்களிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பிணைப்பைக் கண்ணாற் காண முடியாதாயினும் இங்ஙனம் பிணைக்கப்பட்ட உயிர்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்கின்றன. தீய எண்ணங்களோ, 'பூமராங்' என்னும் எறிபடை போல, எய்தவரிடமே திரும்பி வந்து, முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் விளைக்கின்றன.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு வகை எண்ணமே உள்ளத்தில் நிறைந்திருக்க முடியும் என்பதை நாம் அறிவோம். எனவே, மோகத்தை விளைக்கும் விரும்பத்தகாத கருத்துக்கள் உள்ளத்தில் வளர்வதைத் தடுக்கவேண்டும். தீயஎண்ணங்களுக்குப் பதில் நல்ல எண்ணங்களை வலிந்து நினைப்பதன் மூலம், தீயவற்றை அகற்றிவிட வேண்டும். இதனால் ஒத்த தன்மையுள்ள எண்ண அலைகளும், அவற்றின் மூலம் ஏற்ற சூழ்நிலைகளும் ஏற்படும். ஏற்ற தேகப்பயிற்சியால் உடல் வலிமைபெற்று வளர்வதுபோல, நேர்மையான தூய எண்ணங்களைத் திரும்பத்திரும்ப எண்ணுவதால் அவை வலிமை பெறுகின்றன. எங்களுள் ஒவ்வொருவரிடமும் அபரிமிதமான மனோசக்தி உள்ளது. அதை எத்துறையிற் செலுத்த வேண்டும், எந்த முடிவான நோக்கத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் பிரச்சினை. சரியான முறையிலே நினைக்கப் பழகிக்கொள்வது மிகவும் அவசியமானது. ஏனெனில், நாம் எதைச் செய்தாலும் என்ன மனப்பான்மையுடன் செய்கிறோமோ, அதற்கேற்றபடி எமது வெற்றி தோல்விகளும் பாதிக்கப்படுகின்றன. உண்மையில் எமது எண்ணங்களுக்கு ஏற்றபடியே எமது வாழ்க்கையும் அமைகிறது. இம்மனோசக்தியின் இரகசியத்தை உணர்ந்து, அதை நன்கு பயன்படுத்தும் திறமையை நாம் பெறுவது அவசியம். அப்போதுதான் எமது மிக உயர்ந்த இலட்சியங்களுக்குப் புறவாழ்க்கையில் உருக்கொடுக்க முடியும்.

எனவே, மனத்தை ஒருமுகப்படுத்துவதன்மூலம் எண்ணங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையை நாம் முயன்று பெற வேண்டும். எண்ணங்களை உணரும் தன்மை உண்மையானமுன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இக் கொள்கையிலே சிக்கலெதுவும் இல்லை. இதனைப் பயன்படுத்துவது எளிது. மனப்பூர்வமான முயற்சிதான் தேவை. ஒரு பொருளைப்பற்றிச் சிந்திக்கும்போது, கணத்துக்குக்கணம் மாறிவரும் எண்ணச் சுழலில் அகப்படாமற் கவனத்தைத் திருப்பி, எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்துவிடப்பயில வேண்டும். முடிவில் அதியுன்னதப் பொருளான ஆன்மாவுடன் ஒன்றுபடஉதவுகின்ற அனுபூதி நிலையை அடையவேண்டும். கிரமமான சிந்தனைப் பயிற்சி, இம்முன்னேற்றத்துக்கு உதவி செய்து, உள்ளத்தில் உயர்ந்த எண்ண அலைகளைத் தோற்றுவிக்கின்றது. கண்ணுக்குப் புலனாகாத சக்திகளுள்ளே இது யாவற்றிலும் அதிக ஆற்றல் வாய்ந்தது.

நிறைவுள்ளதும் தெளிவானதுமான ஒரு கொள்கையின் அடிப்படையில் எமது வாழ்க்கை அமையவேண்டும். அப்போது எமது செயல்கள் தன்னிறைவு பெற்றுப் பயனுள்ளவைகளாய் விளங்கும். பாதகமான சூழ்நிலையிலும், இக்கொள்கையின் உதவியால், சஞ்சலம், மனக்கலக்கம் ஆகியவற்றின் வசப்படாமல் இருக்க முடியும். உயர்ந்த நோக்கங்கொண்ட ஆண்களும் பெண்களும் எக்காலத்திலும் இங்ஙனம் வாழ்ந்துள்ளனர். இங்

(5ம் பக்கம் பார்க்க)

[நமது அரசியல் நிருபரின் கட்டுரை நாளை வெளியாகிறது.]

## ஐயாறன் எழுதுவது

ரயிலில் பெருங் கூட்டம். இரண்டாம் வகுப்பில் நிற்கவும் இடமில்லை. கதிர்காமத்துக்குக் குடும்பம் குடும்பமாகச் சென்றுவிட்டு, யாழ்ப்பாணம் திரும்பினார்கள்.

வவனியா, கொடிகாமம் முதலிய ஸ்டேஷன்களில் 'அரோகரா' 'அரோகரா' என்று கோஷம் செய்து, ரயிலில் வரும் யாத்திரீகர்களுக்கு, தோசை, பானகம், இளநீர் முதலியன தாராளமாக வழங்கினர். இவ்வித தர்மங்கள் மறையாமல் இன்னும் நடந்துவருவதைக் காண மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

மாத்தறையிலே கதிர்காமத்துக்குச் சைவர்கள்மட்டுமன்றி, பௌத்த, முஸ்லிம் யாத்திரீகர்களும் ஏராளமாக வந்ததாயும், வந்தவர்கள் யாருக்கும், வேற்றுமை எதுவுமின்றி, அன்னதானம் இராப்பகலாக நடந்ததாயும் ரயிலில் வந்த ஓர் அன்பர் வாயார வாழ்த்தினர். கொழும்பிலும் கதிர்காமத் தொண்டர் சபையினர், கோட்டை ஸ்டேஷனுக்கே வந்து, கதிர்காம யாத்திரீகர்களை, கப்பித்தாவத்தை மடத்துக்கு அழைத்துச் சென்று, உணவளித்து, உபசரித்தார்களாம்.

கதிர்காமத் தொண்டர்சபையின் இத்தர்மநிதிக்கு பல சமயத்தவரும் காணிக்கை செலுத்துவது குறிப்பிடத்தக்கது. தொண்டர்கள் பலர், இராப்பகலாக அன்புத் தொண்டு செய்வது குறிப்பிடத்தக்கது.

* * *

இதுவரை என்றுமே இல்லாதபடி கதிர்காமத்தில் அவ்வளவுகூட்டமாம். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு, சிற்றுண்டிகள்.

சிங்கள அன்பர்கள்தான் மிக அதிகம். காவடி எடுத்து, ஆண்களும் பெண்களும், திருநீறு, சந்தனம் அணிந்து, 'அரோகரா''அரோகரா'என்று கோஷம் செய்தபோது, அவர்கள் தமிழராகவே காட்சி அளித்ததாயும், சிங்களவரென்றே தெரியவில்லை என்றும், கதிர்காமத்திலே முருகன், சமயம், மொழி முதலிய வேற்றுமைகளையெல்லாம் போக்கி, எல்லாரையும் ஆச்சரியமாக ஒற்றுமைப் படுத்திவருவதாயும் மகிழ்ச்சியுடன் சொன்னார், அங்கிருந்து திரும்பிய ஓர் அன்பர். ஆனால் காவடி தூக்கி சிங்களப் பெண்களும் ஆண்களும் 'பைலா' டான்ஸ் ஆடுவதுதான் கண்றாவியாம்!

* * *

இனிமேல் தமிழருக்குக் கதிர்காமம் இல்லை என்றும், அங்கு செல்ல முடியாதென்றும் திருக்கேதீச்சரம் முதலிய இடங்களே அவர்களுக்கென்றும் 58ம் வருட கலகத்தின்போது நம்மில் பலரும் நினைத்தோம். ஆனால் அதையெல்லாம் மறந்து பலரும் அங்கு செல்லுவதைப் பார்க்கிறோம். அந்த முருகன் என்னென்ன திருவிளையாடல் செய்யப் போகிறானோ!

* * *

கொழும்பிலே மழை காரணமாக வெள்ளவத்தையில் வெளிவியன்று கே. பி. சுந்தராம்பாள் பாடமுடியா[illegible] போயிற்று. அவர் ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலுக்கு எதிர்பாராத முறையில் வந்து தரிசித்துவிட்டு'பேராதரிக்கும்', 'பக்தியால் யான் உனை' எனும் இரு பாட்டுகளையும் பாடி பலரது கரகோஷமும் பெற்றார்.

அவர் அச்சமயம் பேசுகையில், "சிறு வயதில், ஜிந்துப்பிட்டி தியேட்டரில் நாடகம் ஆடிவந்தேன். தினசரி இந்த முருகனிடம்தான் வந்து வேண்டுவேன். நாடகமெல்லாம் வெற்றியாக்கி வந்தான். முருகன் நமக்கு அருள் செய்யக்

(5ம் பக்கம் பார்க்க)

# கல்லோயாவில் நடைபெறும் துரித வேலைகள்

## 43200 ஏக்கர் நிலத்துக்கு பாசன வசதி செய்யப்படும்

கொழும்பு, ஞாயிறு

1959—60ம் ஆண்டில், ஐந்து வருட கல்லோயா அபிவிருத்தித் திட்டத்துக்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. 7 குளங்களில் 43,200 ஏக்கர் நிலத்துக்கான பாசன வசதி மேற்கொள்ளப்படும். 7500 ஏக்கரில் கரும்புச் சாகுபடி செய்யப்படுமென்றும், 6000 குடியிருப்பாளர்கள் அங்கு அமர்த்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## கல்கத்தா ஜனத்தொகை

கல்கத்தா, ஜுலை 30

கல்கத்தாவின் ஜனத்தொகை 1980ம் ஆண்டு 120 லட்சம் ஆக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கட்டுரை பேச்சு போட்டி

காத்தான்குடி, ஞாயிறு

...க்களப்பு, தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் பாடசாலை மாணவர்கட்கிடையில் கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடாத்தத் தீர்மானித்துள்ளனர். மேல்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளில்முதலிடம்பெறுவோருக்கு வெள்ளிப்பதக்கங்களும் இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெறுவோருக்குப் புத்தகங்களும், நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்கப்பட இருக்கின்றன.

# சைவசமய குருக்கள்மார் சபை தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை சைவசமயக் குருக்கள்மார் சபை வருடாந்தக் கூட்டம் சென்ற சனிக்கிழமை சபைத் தலைவர் சிவஸ்ரீ க. கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையின்கீழ் சித்தங்கேணி ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் ஆரம்பமாயிற்று. புதுவருட உத்தியோகஸ்தர்களாக கீழ்க்காணுபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள், உபதலைவர்கள்: தி. சபாரத்தினக் குருக்கள், கு. இராமநாதக் குருக்குள், காரியதரிசி, க. கணேச குருக்கள், உபகாரியதரிசி: சோ. சிவசுப்பிரமணிய ஐயர், தனாதிகாரி: வை. மு: குமாரசுவாமிக் குருக்கள், உபதனாதிகாரி: க. கணேசசர்மா, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: சிவஸ்ரீ ச. ப. ஷண்முகரத்தினக் குருக்கள், எஸ். முத்துக்குமாரசாமிக் குருக்கள், கு. நகுலேஸ்வரக் குருக்கள், எஸ். சோமசுந்தர ஐயர், ஏ. துரைச்சாமி ஐயர், சு. இராஜேந்திரக் குருக்கள், எஸ். கே. சபாரத்தினக் குருக்கள், எஸ். சுப்பிரமணியக் குருக்கள்.

# வடமாகாண கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டி

## பல புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன

மாவிட்டபுரம், திங்கள்

வடமாகாண கல்லூரிகளின் 2வது பிரிவு விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (எச். சி.), சென். ஹென்றிஸ்கல்லூரி(எஸ். எச். சி.), யாழ்ப்பாணக் கல்லூரி (ஜே.சி.), சென். ஜோன்ஸ். கல்லூரி (எஸ். ஜே. சி.), சென். பற்றிக்ஸ் கல்லூரி (எஸ்.பி.சி.), செகிறட் ஹாட் கல்லூரி (எஸ். எ. சி.), சென். அன்ரனிஸ் கல்லூரி (எஸ். எ. சி.) சென் ஜோசேப் கல்லூரி, எஸ். ஜே. சி. பங்குபற்றின. இப்போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் வணக்கத்துக்குரிய பி. ஜே. சீவரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலைகளுக்கிடையே ஏற்படும் பெரிய உடற் பயிற்சிப் போட்டியிற் பங்குபற்றுவதற்கு பயிற்சி அளிப்பதும், பங்குபற்றுவோரிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் நிலவச் செய்வதும், உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றிபெறுவதிலும் பார்க்க அப்போட்டியிற் கலந்து போட்டியிடுவதே சிறந்த அம்சம் என்ற கொள்கையை மாணவர்களிடையே பரவச் செய்வதும் இப்போட்டியின் நோக்கமாகும்.

இப்போட்டியிற் பங்கு பற்றியவர்களிடையே புள்ளிகள் கணிக்கப்படவில்லை. ஆனல் தலைவரால் தராதரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

புதிய சாதனைகளை ஏற்படுத்தியவர்களின் விபரம் பின்வருமாறு:- உயரப் பாய்தலில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். தெய்வேந்திரா 4' 3" பாய்ந்து புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். 4×110 யார் அஞ்சல்ஓட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரியினர் 50·4செக்கன்டில் ஒரு புதியசாதனையை ஏற்படுத்தியுள்ளனர். நீளப்பாய்தலில், கீழ்ப்பிரிவில் சென்ஜோன் கல்லூரியைச் சேர்ந்த எம். தெய்வேந்திரா 23அடி பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியினர் 4×440 யார் அஞ்சல் ஓட்டத்தில் 3 நிமிடம் 46 · 4 செக்கடில் ஓடி புதிய சாதனையை நிலைநாட்டியள்ளனர். மற்றைய முடிவுகள் பின்வருமாறு.

**கோல் ஊன்றி பாய்தல்**
**மேல் பிரிவு- 9' 3"**
(1) என். ஞானலிங்கம் எஸ். ஜே. சி. (2) பி. நடராசா எச். சி. (3) எ. கனகலிங்கம் எஸ். பி. சி.

**உயரப்பாய்தல்**
**மேல் பிரிவு:- 5' 7 3/4"**
(1) எம். வி. ஸ்ரான்லி எஸ். எ. சி. (3) என். ஞானலிங்கம் எஸ். ஜே. சி (3) சி. ஸ்காந்தரணியம் எஸ். எ. சி.
**கீழ்பிரிவு:- 5' 3"**
(1) எம். தெய்வேந்திரா எஸ். ஜே. சி. (2) என். சிவகுருநாதன் எச். சி. (3) எஸ். எ. பஸ்ரியான் (எஸ். ஏ. சி.)

**நீளப்பாய்தல்**
**மேல் பிரிவு:- 19' 4"**
(1) என். தியாகராசா ஜே.சி. (2) டி. ஜே என். செல்லத்துரை எஸ். ஜே. சி. (3) என். எ. ஸ்ரீ. பத்மராசா ஜே. சி.
**கீழ் பிரிவு:- 18' 11 1/4"**
(1) எம். தெய்வேந்திரா எஸ். ஜே. சி. (2) எம். பி. பல்தாசர் எஸ். பி சி. (3) பி. இராசநாதன் யே. சி.

**கெந்தி அடிவைத்துப் பாய்தல்**
**மேல்பிரிவு 40' 9 1/2"**
(1) எ. எஸ் இராசேந்திரம் (எச். சி.) (2) பி. கனகதுரை எஸ். யே. சி (3) எம். தவயோகராசா யே. சி.

**ஈட்டி எறிதல்**
**மேல் பிரிவு 47'**
(1) சி. எம். ஜே. அல்விஸ் எஸ். பி. சி. (2) மா. கு. சண்முகநாதன் எஸ். ஜே. சி. (3) எஸ். எஸ். என். ஜே. அந்தோனிப்பிள்ளை எஸ். பி. சி.

**பரிதி வட்டம் எறிதல்**
**மேல் பிரிவு 108' 3"**
(1) எ. எவ். செபமாலை மரியன் எஸ். எ. சி. (2) என். யே. அந்தோனிப்பிள்ளை எஸ். பி. சி. (3) எஸ். மரியதாஸ் எஸ். எ. சி.
**கீழ் பிரிவு: 127' 1"**
(1) சி. ஞானபக்தன் எஸ். ஜே. சி. (2) கே. தெய்வேந்திரன் எச். சி. (3) ஜே. எல். ஜே. மனோகரன் எஸ். பி. சி.

**குண்டு எறிதல்**
**மேல் பிரிவு 38'**
(1) சி. எம். யே. அல்விஸ் எஸ். பி. சி. (2) எஸ். என். யே. அந்தோனிப்பிள்ளை எஸ். பி. சி. (3) எஸ். பி. பரராசசேகரம் யே. சி.
**கீழ் பிரிவு 28' 9 1/2"**
(1) சி. ஞானபக்தன் எஸ். யே. சி. (2) எ. எல். சிங்கராயர் எஸ். எ. சி. (3) எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி எச். சி.

**தடைதாண்டி ஓடுதல்**
**120 யார்**
**மேற்பிரிவு: 16.5 செ**
1. எம். தவயோகராசா (ஜே. சி.) 2. சி. எம். ஜே. அல்வைஸ் (எஸ். பி. சி.) 3. பி. நடராசா (எச். சி)
**கீழ்ப்பிரிவு: 80 யார் 12.0 செக்**
1. ஆர். எஸ். அரசரத்தினம் (எஸ். ஜே. சி.) 2. எஸ். மகேஸ்வரன் எஸ். ஜே. சி. 3. ஜே. மனோகரன் எஸ். பி. சி.

**அஞ்சல் ஓட்டம்**
**மேற்பிரிவு:4×110 யார் 47.7 செ**
எஸ். ஜே. சி. ஜே. சி. 3. எச். சி.
**கீழ்ப்பிரிவு:- 4 X 110யார் 50 ·4 செ**
X (1) எஸ். ஜே. சி. (2)எஸ். பி. சி. (3) யே. சி.
**மேல் பிரிவு:- 4 X 440 யார் 3நி. 46 ·4 செ**
× (1) ஜே. சி. (2) எச். சி. (3) எஸ். ஜே. சி.

**100 யார் ஓட்டம்**
**மேல் பிரிவு:- 11 செ**
(1) டி. ஜே. என். செல்வத்துரை (எஸ். ஜே. சி.) (2) எம். தவயோகராசா (ஜே. சி.) (3) எம். விக்கிரமசீசன் (எஸ். ஏ. சி.)

**100 யார் ஓட்டம்**
**கீழ்ப் பிரிவு 11.6 செக்.**
(1) எ. எம். இப்பிறகிம் எஸ். ஜே. சி. (3) வி. இராசநாதன், ஜே. சி. (3) பால்தாசர், எஸ். பி. சி.

**220 யார் ஓட்டம்**
**மேல் பிரிவு 24.8 செக்.**
(1) டி. ஜே. என். செல்லத்துரை எஸ். ஜே. சி. (2) எம். விக்கிரமசீசன் எஸ். எவ். சி. (3) சிறி பத்மராசா ஜே சி.
**கீழ்ப் பிரிவு: 26 செக்.**
(1) எம். தெய்வேந்திரா எஸ். ஜே. சி. (2) எம். பி. பல்தசார் எஸ். பி. சி. (3) எ. எம். இப்ராகிம் எஸ். ஜே. சி.

**440 யார்ஓட்டம்55.6செக்**
**மேல்பிரிவு**
1. டி. கிருவுத்தர் எஸ். பி. சி. (2) எம். பி. பால்தாசர் எஸ். பி. சி. (3) கே. மகேந்திரன் எச். சி.

**880 யார் ஓட்டம்**
**மேல்பிரிவு 2நி 11 செ.**
(1) வி. சண்முகலிங்கம் எச் சி. (2) ஜே. என். சின்னையா எச். சி. (3) வி. இரவீந்திரன். எஸ். ஜே. சி.

**1 மைல் ஓட்டம்**
**மேல்பிரிவு 4. நி 53.7 செ.**
(1) வி. சண்முகலிங்கம் எச். சி (2) வி. இரவீந்திரன் எஸ். ஜே சி. (3) எஸ். மகாலிங்கம். ஜே. சி.

**120 யார் ஓட்டம்**
**மேல்பிரிவு 11.0 செக்.**
(1) டி. ஜே. என். செல்லத்துரை எஸ். ஜே. சி. (2) எம். தவயோகராசா ஜே. சி. (3) எம். விக்கிரமசீசன் எஸ். எ. சி.

# வாழ்வுக்கு ஒளியூட்டுவது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் செய்யப் பழகுவதாயின், வெளிச்சூழலை வெற்றிகரமாகக் கையாளுவதற்கு, எமது உள்ளத்தின் நிலையைப் பற்றி முதலிற் கவனிக்கவேண்டும். மனக்கவலைகள், அச்சம், உள்ளக்குழப்பம் ஆகியவை மனச்சாந்தியையும் ஆற்றலையும் சிதறச்செய்து, பலவீனப்படுத்தி, நிலைகெடச் செய்யவல்லவை. ஆன்மாவிலிருந்தே மனம் தன் சக்தியைப் பெறுகின்றது. உள்ளத்தின் நிலைக்கேற்ப யாவும் தம் குணவியல்புகளைப் பெறுகின்றன. நல்லதோ கெட்டதோ உள்ளத்தில் இருந்தா...

எண்ணங்களே உலகையாள்கின்றன. அகத்திலுள்ள எண்ணங்களின் புறவடிவே உலகம். எனவே, இவையிரண்டும் பிரிக்கமுடியாதவை. உங்கள் எண்ணங்களைத்தெளிவான, உயிர்த்துடிப்புள்ள சொற்களால் வெளியிடுவதன் மூலம் நீங்கள் உங்கள் வாழ்வை வெல்லலாம். எதிர்மறை எண்ணங்கள் கீழ்த்தரமானவை;அறிவை மறைப்பவை. அவற்ருல் உயிர்ச்சக்தி விரையமாகின்றது. உங்கள் எண்ணங்களையும் சொற்களையும் செயல்களையும் ஆன்மீகத்துறையிலே திருப்புங்கள். அவை நுட்பமும் முக்கிய...

...உண்மைப் பொருளுடன் தொடர்புகொள்ள முயலுங்கால் அங்கிலையை அடைவதற்கான அடிப்படைத் தேவைகளுள்ளே பிறர்க்குச் சேவை புரிவதும் ஒன்று என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். எந்தப் பூரணப் பொருளிலிருந்து தோன்றி எதன் ஒருபகுதியாக நாம் இருக்கின்ருேமோ அத்தெய்வீகப் பொருளின் உயிர்ப் பிரதிநிதிகளாய் நாம் வாழவேண்டுமாயின் அதன் மற்ருெரு பகுதியான பிற உயிர்களுக்குச் சேவை புரிவதில் எமது வாழ்வை அர்ப்பணம் செய்தல்வேண்டும். இதன்மூலம் சொந்தத்திறமையையும் எமது நோக்கத்தின் நேர்மையையும் சோதித்தறியலாம்.

எமது அகவாழ்வில் எப்போதும் அன்பு பெருகவேண்டும். அன்போடு உண்மையும் இணையவேண்டும் சத்தியத்தின் ஒப்பற்ற சக்தியை மனித எண்ணங்களின் மூலம் வெளிப்படுத்துவது அன்பேயாகும். எமது சகோதர மக்களுடன் எல்லையற்ற அன்பும் பரிவும் காட்டி வாழாவிடின், நாம் அதிகம் சாதிக்கமுடியாது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு, மனித சமுதாயத்தின் ஊழியர்கள் என்ற முறையில் எமது உண்மைச் சொருபத்தின் பெருமையை இன்னும் நன்ருக அறிந்து, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஆன்மாவில் அனைத்தையும், அனைத்திலும் ஆன்மாவையும் காண்போமாக. "அறிவோன், அறிவு, புலன்கள், பூதங்கள் ஆகிய அனைத்திற்கும் ஆதாரமான மங்காத பொருளை யார் அறிகிருரோ, எல்லாம் அறிந்த அவர் யாவற்றுள்ளும் வதிகிருர்; அதாவது யாவறுள்ளும் உள்ள ஆன்மா தானேயென்று உணர்கிருர்" என்று பிரச்ன உபநிடதம் கூறுகின்றது.

உயர்ந்த எண்ணங்கள், செயல்கள், நம்பிக்கை, பக்தி ஆகியவற்றின் மூலம் நீங்கள் யாவரும் இறைவனருளைப் பெறுவீர்களாக. உங்களனைவர் மேலும் இறைவன் தமது அருளைப் பொழிவாராக.

# 3வது எதிரிக்கும் எனது மகனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது தெரியாது'

## ஊரெழு கொலை வழக்கில் மாண்டவரின் தந்தை சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

"மூன்றாவது எதிரிக்கும் (செல்வி சரஸ்வதி) காலஞ்சென்ற எனது மகனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாக எனக்குத் தெரியாது" என்று ஊரெழு கொலை வழக்கில் சாட்சியமளித்த நன்னியர் மாரிமுத்து கூறினார்.

மாரிமுத்து மார்க்கண்டுஎன்பவரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும், கொலை செய்ததாகவும் கொலைக்கான சாட்சியங்களை மறைத்து வைக்கக் காரணமாக இருந்ததாகவும் குற்றம் சாட்டி ஊரெழுவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மராமத்து இலாக்கா ஓவர்சியர் கே. செல்லையா என்பவரின் வேலைக்காரன் சுப்பையா மாடாசாமி, கார்சாரதியான முத்து முத்துச் சாமி, செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசார் தொடர்ந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் அரசுவாலடன் முன்னிலையில் சென்ற சனிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிராசிக்கியுஷன் தரப்பில்பொலிஸ்சார்ஜன்ட் பி.முருகேசுவின் உதவியுடன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். செபமாலை ஆஜரானார்.

திரு. வி. நடராஜாவின் அனுசரணையுடன் திரு. கே. வி. என். சண்முகநாதன் காலஞ்சென்ற மாரிமுத்து மார்க்கண்டனின் நலனைக் கவனித்தார்.

முதலாம், மூன்றும் எதிரிகளின் சார்பில் திரு. வி. செல்லத்துரையும் திரு ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜரானார்கள். இரண்டாவது எதிரியின் சார்பில் திரு. ஆர். வி. வசுவநாதன் ஆஜரானார்.

காலஞ்சென்ற மார்க்கண்டுவின் தந்தை நன்னியர் மாரிமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

### 3 வருடமாக பிரிந்திருந்தனர்

மார்க்கண்டு எனது மகன் அவருக்கு 24 வயது. மாணிக்கன் என்பவரின் மகளான லெட்சுமியை அவர் கலியாணம் செய்திருந்தார். சென்ற மூன்று வருடமாக லெட்சுமியும் மார்க்கண்டுவும் பிரிந்திருந்தனர்.

ஏப்ரல் மாதம் 25ந் திகதி பின்னேரம் 5 மணியளவில் மார்க்கண்டு எனது வீட்டுக்கு வந்து சாப்பிட்டார். மீனும் சோறும் சாப்பிட்டபின் 6 மணியளவில் வெளியே போனார். அவர் எங்கே போனாரென்பது எனக்குத் தெரியாது. சாரம் உடுத்துக் கொண்டு தோளில் ஒரு துவாயும் போட்டுக் கொண்டு போனார்.

இச் சமயம் சாரமும் துவாயும் அவரிடம் காண்பிக்கப் பட்டது. "அன்று பின்னேரம் மார்க்கண்டு கட்டியிருந்த சாரமும் துவாயும் இவைகள் தான்" என்று சாட்சி கூறினார். கைக்கடிகாரம் ஒன்று காண்பிக்கப்பட்ட பொழுது, "நான் மார்க்கண்டுவைக் கடைசியாகப் பார்த்த பொழுது இது போன்ற ஒரு கைக்கடிகாரம் கட்டியிருந்தார்" என்று கூறிய சாட்சி நன்னியர் மாரிமுத்து தனது மகன் இறந்த செய்தி 26ந் திகதி தனக்குக் கிடைத்ததென்றார்.

நீதவான்: சென்ற மூன்று வருடமாக உமது மகன் உமது வீட்டில் நித்திரை செய்ததில்லையென்று நீர் பொலிசுக்கு கொடுத்த வாக்கு மூலத்தில் கூறியிருக்கிறீரல்லவா?

சாட்சி: ஆம். இரவில் எங்கே நித்திரை செய்கிறாய் என்று மார்க்கண்டுவை நான் கேட்கவில்லை.

சாட்சி மாரிமுத்து மேலும் கூறியதாவது:-

கட்டடத்தில் வேலை செய்வதற்கும் தோட்டத்தில் வேலை செய்வதற்கும் செல்லையா வீட்டுக்கு மார்க்கண்டு செல்வதுண்டு. கிளிநொச்சியிலுள்ள செல்லையாவின் கமத்தில் மார்க்கண்டு வேலை செய்ததுபற்றி எனக்குத் தெரியாது.

### தொடர்புபற்றி தெரியாது

மூன்றாவது எதிரிக்கும்(செல்விசரஸ்வதி) காலஞ் சென்றவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியாது.

நீதவான்: வள்ளியின் வீட்டில் மூன்றாவது எதிரியுடனும் காலஞ் சென்றவர் தங்கியிருந்த பொழுது அவர்களுக்குள் எதுவித தொடர்புமிருந்ததாக உமக்குத் தெரியுமா?

சாட்சி: எனக்கு அது பற்றித் தெரியாது.

நீதவான்: காலஞ் சென்றவர் அது பற்றி உமக்கு ஏதாவது சொன்னாரா?

சாட்சி: இல்லை. அது பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை.

நெருங்கிய தொடர்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

செல்லையாவிடம் வேலை பார்த்து வந்த முதல் எதிரியைத் தனக்குத் தெரியுமென்றும் காலஞ் சென்றவரும் எதிரியும் நண்பர்களென்றும், மார்க்கண்டு வேலைக்குப் போகச் சுணங்கினால் முதல் எதிரி வீட்டுக்கு வந்து கூட்டிக்கொண்டு போவதுண்டென்றும் இருவரும் ஒன்றாகக் குடிப்பதுண்டென்றும் சாட்சி மேலும் தெரிவித்தார்.

திரு. செல்லத்துரை சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி மாரிமுத்து கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

திரு. செல்லையாவின் வீட்டுக்கு நான் ஒருபோதும் போனதில்லை. அவருடைய வீட்டில் எனது மகன் வேலைசெய்ததையும் நான் பார்த்ததில்லை. காலஞ்சென்றவர், தான் வேலை செய்யும் இடத்தை எனக்குத் தெரிவித்ததில்லை. எனக்கு உரும்பராயில் உறவினர் எவரும் இல்லை. இந்த வழக்குக்குப் பின்புதான் சின்னவன் தில்லையனை எனக்குத் தெரியும்.

வழக்கறிஞர்:- உமது வீட்டுக்குக் கிட்ட அம்பன் வைரமுத்து கள்ளுக் கொட்டில் வைத்திருக்கிறார்?

சாட்சி:- ஆம் அந்தக் கொட்டிலுக்கு, கள்ளுக்காக நான் ஒருபோதும் போனதில்லை.

வழக்கறிஞர்:- நீர் எங்கே கள்ளுக்குடிப்பது?

சாட்சி: உரும்பராயில்.

வழக்கறிஞர்: காலஞ்சென்ற உமது மகன் உம்முடன் தங்குவதுண்டா?

சாட்சி:- இரவுச் சாப்பாட்டுக்கு வருவார். பின்னர் வெளியே போய் மறுநாள் இரவுச் சாப்பாட்டுக்கு வருவார். காலை மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவதில்லை.

டாக்டர் யோகநாதனின் மனைவி, திருமதி திலகவதி யோகநாதன் சாட்சியமளிக்கையில் 1957ம் வருடம் ஜூலை மாதம் தொடக்கம் 1960 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில்தான் ஆசிரியையாகக் கடமையாற்றியதாகவும் சென்ற மூன்று வருடங்களாக மூன்றாவது எதிரியைத் தமக்குத் தெரியுமென்றும் கூறினார்.

கொழும்பு மாநகரசபையைச் சேர்ந்ததிரு.வி. இராசரத்தினம் சாட்சியமளிக்கையில்இரண்டாவது எதிரிதன்னிடம் சமையல்காரராகவேலைபார்த்ததாகவும் பின்னர் கார் சாரதியாகி யாழ்ப்பாணத்துக்கு வந்து கந்தையா என்பவரிடம் கார் சாரதியாக வேலைபார்த்து வந்ததாகவும் தெரிவித்தார்.

மேல் விசாரணை ஆகஸ்ட் மாதம் 12-ந் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

# ஸ்தலஸ்தாபன சேவைகமிஷன் திருத்த மசோதாவுக்குகண்டனம்

கொழும்பு, ஞாயிறு

ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷன் அங்கத்தவரை, ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு அமைச்சரே இனி தெரிவு செய்வார் என்று கொண்டு வந்த திருத்த மசோதாவைக் கண்டிக்கும் முகமாக புதிய நகரமண்டபத்தில் பட்டினசபை, மாநகர சபை அங்கத்தினர் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சங்கக் காரியதரிசி திரு. எட்மண்ட் வணிகசேகரா பேசும்போது குறிப்பிட்டதாவது:- ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனில் பணியாற்றுவதற்கு நான்கு அங்கத்தினரை உள்நாட்டுச் சங்கங்கள் தெரிவு செய்யும் உரிமையைக் காலஞ்சென்ற பிரதமர் என். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அளித்திருந்தார். ஆனால், இத் திருத்த மசோதா அங்கீகரிக்கப்பட்டால் கமிஷன் அங்கத்தினரைத் தன் விருப்பத்திற்கேற்ப மாற்றும்படி உள்நாட்டுச் சபைகளைப் பணிக்க அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

மேலும், இம்மசோதா கமிஷனின் உரிமையைப் பறிப்பதாகவும் இதனால் சொக்ஸிக் கமிஷனின் சிபார்சுகளுக்கு மாறாக இருப்பவற்றை மசோதாவிலிருந்து நீக்குவதெனவும் முடிவு செய்யப்பெற்றது. இம் முடிவு மந்திரிக்குத் தெரிவிக்கப்படுவதுடன் தூதுக்கோஷ்டியும் அவரை விரைவில் சந்திக்கும்.

## மாணவர் சுற்றுப் பிரயாணம்

யாழ்ப்பாணம், திங்கள்

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையைச் சேர்ந்த 60 மாணவர்கள் அகில இலங்கை கல்விச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை தமது பிரயாணத்தை ஆரம்பித்து இவர்கள் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பிரதான நகரங்களையும் பார்வையிடுவர்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

## மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

MONARA PAPPADAM
ROSE FLOWER BRAND BEST PAPPADAM
TRADE MARK No 18255
A. M. BUHARI, 255, 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.


# 'வான்ட் வெஸ்ட்' வெள்ளிக் கிண்ணம் யாருக்கு?

## இன்று நடைபெறும் பாஸ்கட் பந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண பாஸ்கட் பந்தாட்டச் சங்கத்தினல் நடாத்தப்படும் 'வான்ட்வெஸ்ட்' வெள்ளிக் கிண்ணத்துக்கான இறுதி ஆட்டம் இன்று மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இப்பொழுது நடைபெறும் இப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் போது தோல்வியையே காணுத யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் கோஷ்டியும் பலம் வாய்ந்த, வை. எம். சி. ஏ. கோஷ்டியும் கலந்து கொள்ளுகின்றன.

இந்த இறுதி ஆட்டத்தின் முடிவில் வெற்றியீட்டியவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என், கிருஷ்ணதாசன் பிரதம விருந்தினராக கலந்து பரிசில்களை வழங்குவார். வடபகுதியிலுள்ள திறமை பொருந்திய பாஸ்கட் பந்தாட்ட வீரர்களான துரைரத்தினம் விக்ரர் சின்னத்துரை ஆகியோரைக் கொண்டியங்கும் பட்டதாரி மாணவர் கோஷ்டியே, இப்போட்டியில் வான்ட்வெஸ்ட வெள்ளிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொள்ளலாம் எனப் பல வட்டாரங்களிலும் பேசிக் கொள்ளப்படுகிறது.

பாஸ்கட் பந்தாட்ட திறமைசாலிகளான தம்பிப்பிள்ளை, கோபால், பாலசுப்பிரமணியம், சகோதரர்களைக் கொண்ட வை. எம். சி. ஏ. கோஷ்டியில் மிகத் திறமையாக விளையாடக்கூடிய பாலசுப்பிரமணியம் வழக்கம்போலத் தமது திறமையைக் காட்டுவராஞல் வான்ட்வெஸ்ட் வெள்ளிக்கிண்ணத்தை இவர்கள் பெறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

வடபகுதியைச் சேர்ந்த பிரபலமான வீரர்களில் அநேகர் இந்த இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளுகின்றனர்.

---

## பாஸ்கட் பந்தாட்டம்

### வட பகுதியிலிருந்து ஒரு கோஷ்டி செல்லும்

யாழ்ப்பாணம், திங்கள்

மேற்கு மாகாண பாஸ்கட் பந்தாட்டச் சங்கத்திஞல் நடத்தப்படவிருக்கும் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள வடபகுதியிலிருந்து ஒரு கோஷ்டியை அனுப்புவதென நேற்று நடைபெற்ற வடமாகாண பாஸ்கட் பந்தாட்டச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கு மாகாண சுற்றுப் போட்டிகள் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் நடைபெறவிருக்கிறது. வடபகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பலம் பொருந்திய ஓர் கோஷ்டி செல்லுவதற்கான ஏற்பாடுகளை இச்சங்கம் இப்பொழுதிருந்தே கவனித்து வருகிறது.

---

## லோகநாதன் திரும்பினர்

கொழும்பு, ஞாயிறு

சென்னையில் சுகவீனமாகவிருக்கும் தமது மனைவியைப் பார்க்கச் சென்றிருந்த இலங்கை வங்கியின் ஜெனரல் மனேஜர் திரு. வி லோகநாதன், இலங்கை வங்கி தேசியமயமாக்கப்படும் என்று நிதிமந்திரி தமது வரவுசெலவுத் திட்டப் பிரசங்கத்தில் அறிவித்ததும் கொழும்புக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

இலங்கை வங்கி டைரக்டர்கள் சபை அங்கத்தவர்களை அழைத்து நிதிமந்திரி நேற்று ஒரு மகாநாடு நடத்தினர், இந்தமகாநாட்டில் திரு. லோகநாதனும் கலந்துகொண்டார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள் 31-7-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வேல்விழா ஒலிப் பதிவுகள்.

இரவு 7-30 எஸ். சீதாராம்-வீணை, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 செல்வி ஆர். இராசையா - பேச்சு, 9-30 வேல் விழா ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்சிக்குறிப்புகள், 7-30 எஸ். சுப்பிரமணியம் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 ஸ்ரீரங்கம் ஆர். சரோஜா - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 நல்லுரை, 7-40 திரைப்பட இசை, 8-40 எஸ். சுப்பிரமணியம் - பாட்டு, 9-40 ஸ்ரீரங்கம் ஆர். சரோஜா — பாட்டு.

---

## அரியாலை யுனைட்டெட் கிளப் நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலை யுனைடெட் கிளப்பின் 15வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கிளப்பின் 15வது வருடாந்த தினத்தை மிகச் சிறப்பாகவும் பெரியளவிலும் கொண்டாடுவதெனவும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான விளையாட்டுச்சங்கமொன்றுடன் ஓர் விளையாட்டுப்போட்டியை அன்றையதினம் நடாத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது

புதுவருட உத்தியோகத்தர் தேர்வு வருமாறு:-

தலைவர்: திரு. இ. முத்தையா, காரியதரிசி: இ. கே. குமரையா, தனதிகாரி: திரு. எஸ். நடேசு, 4 பேர் கொண்ட நிருவாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## 2 வருடங்களில் டெலிபோன்

கொழும்பு, ஞாயிறு

டெலிபோன்வேண்டுமென்று கோரி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் 4, 156 பேர்களுக்கும் இனனும் இரண்டு வருடங்களில் டெலிபோன் கிடைத்துவிடும் என்று போக்குவரத்து, தபால் மந்திரி திரு. பீ. பி. ஜி. கலுகல்ல தெரிவித்தார்.

இன்னும் இரண்டு வருடங்களில் டெலிபோன் மீதுள்ள வரியும் நீக்கப்பட்டுவிடுமென்று மந்திரி நம்புகிறர்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

## கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வர்ணங்களிலும் கிடைக்கும், சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: **ஸி. டப்ளியூ. ஈ.**

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

மகத்தான 3 -வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி
கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும்,
பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30மணிக்கும்

பி. சரோஜாதேவி, எஸ். எஸ். ராஜேந்திரன்,
தங்கவேலு நடித்த

மணப்பந்தல்

எல்லோரும் பார்த்து மகிழவேண்டிய
ஓர் குடும்பச்சித்திரம்!

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10, பி. ப. 2-30 மணிக்கும்.

பாலாஜி, பண்டபாய், எஸ். எஸ். ராஜேந்திரன்
நடித்த

அன்பு எங்கே?

இப்பொழுது திரையிடப்படுகிறது!

ராணி சினிமா (யாழ்ப்பாணம்) காலை 10 மணி, பி. ப. 2 மணி மாலை 6-00மணி, 9-45 மணிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி
நடித்த

திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும்
அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும்
மகோன்னத தயாரிப்பு!


## கலை அரங்கம்

# பரத நாட்டியத்திற்கு மேல்நாட்டில் மதிப்பு

### குமாரி கமலா கூறுகிறார்

"எனது மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் பணத்தை இழந்தபோதிலும் இன்னல்கள் ஏற்பட்ட போதிலும் எமது பரதநாட்டியக் கலையின் பெருமையை மேல்நாட்டார் உணர்ந்து நன்கு ரசித்ததே எனக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இச்சுற்றுப் பிரயாணத்தில் எதிர் காலத்துக்குத் தேவையான புதிய அனுபவங்களைப் பெற்றேன்" என்று குமாரி கமலா சென்னை சினிமாப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இத்தாலி, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, ஹங்கேரி, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சுமார் நாலரை மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்திவிட்டு குமாரி கமலா சென்னை திரும்பினர்.

---

## ரூ. 10,000 தேவ் ஆனந்த் உதவி

பிரபல வட இந்திய நடிகர் தேவ் ஆனந்த, வெள்ளத்தின் கொடுமையால் பூனவில் அவதிப்படுவோருக்கு 10,000 ரூபாய் வழங்கினர். பம்பாய் நடிகர்கள் தெருத் தெருவாக நிதி திரட்டி 8000 ரூபாயும் இரண்டு 'ட்ரக்' நிறைய துணி மணிகளும் கொடுத்தனர்.

---

## "சிரித்துச் சிரித்து சிறையிலிட்டார்!"

"சிரித்துச் சிரித்து என்னைச் சிறையிலிட்டார். கன்னம் சிவக்கச் சிவக்க வந்து கதை படித்தார்" என்ற பாடலை டி. எம். சௌந்தரராஜன் தேவர் பிலிம்சாரின் "தாய் சொல்லைத் தட்டாதே" என்ற படத்துக்காகப் பாடினர்.

"காட்டுக்குள்ளே திருவிழா, கன்னிப் பொண்ணு மணவிழா, சிரிக்கும் மலர்கள் தூவி சிங்சாரிக்கும் பொன்விழா" என்று சுசிலா பாடிய பாடலும் பதிவாக்கப் பட்டது.

கண்ணதாசன் இயற்றிய இந்த இரு பாடல்களுக்கும் கே. வி. மகாதேவன் இசையமைத்தார். எம். ஜி. ஆர்., சரோஜாதேவி ஜோடி நடிக்கும் இப்படத்தை திருமுகம் டைரக்ட் செய்கிறார்.

---

## 30 படங்களுக்கு சிங்கையில் தடை

சிங்கப்பூர் தணிக்கை அதிகாரிகள் இவ்வருஷம் முதல் 6 மாதத்தில் 30 படங்களைத் தடை செய்தனர். கொள்ளை, கொலை, பலாத்காரம், கள்ளக் கடத்தல், மூடநம்பிக்கை, இனத்துவேஷம், கீழ்த்தர உணர்ச்சி, ஆசியப் பண்புக்கு மாறுன காதல் காட்சிகள் ஆகியவைகளுக்காக இப்படங்கள் தடை செய்யப்பட்டன

---

## இந்தியில் 'களத்தூர் கண்ணம்மா'

தமிழில் தயாரித்து வெற்றி பெற்ற "களத்தூர் கண்ணம்மா"வை இந்தியில் தயாரிக்க ஏ. வி. எம். திட்டமிட்டுள்ளார்.

கண்ணம்மாவின் பாகத்தில் மீனு குமாரி நடிப்பாரென்று தெரிகிறது.

## 'மஞ்சளும் குங்குமமும்'

மதுரம்பிக்சர்ஸ் தயாரிக்கும் தங்கள் இரண்டாவது படத்துக்கு "மஞ்சளும் குங்குமமும்" என்று பெயரிட்டுள்ளனர். 'கைராசி' புகழ் டைரக்டர் சங்கர் இப்படத்தை டைரக்ட் செய்வார். எம். எஸ். சோலைமலை கதை வசனம் எழுதுகிறார்.

மஞ்சளும் குங்குமமும் அணிந்த மங்கையரின் பாகத்தை சாவித்திரி ஏற்று நடிப்பார். சிவாஜி கணேசன் கதாநாயகனாக நடிப்பார்.

---

## இரவுக் காட்சிகள் சிறுவர் சிறுமியருக்கு தடை விதிக்க சிபார்சு

நள்ளிரவுக்கு மேல் சினிமாக் காட்சிகள் கூடாதென்றும் 18 வயதுக்குட்பட்ட இளைஞர்களை இரவுக் காட்சிகளுக்கு அனுமதிக்கக்கூடாதென்றும் இரவுக் காட்சிகள் 2 மணி நேரத்திற்கு மேல் நீடிக்கக் கூடாதென்றும் ஜப்பானிய தியேட்டர் சீர்திருத்தக் குழு சிபார்சு செய்துள்ளது.

---

## குடிகாரனாக சிவாஜி

"நிச்சய தாம்பூலம்" மிக விரைவாக வளர்ந்து வருகிறது. சிவாஜிகணேசன் இப்படத்தில் குடிகாரனாக நடித்த ஒரு காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது.

---

## மகளே உன் சமர்த்து

திருமகள் படத் தயாரிப்பாளரின் "மகளே உன் சமர்த்து" என்றபடம் முடிவடையுந்தறுவாயிலுள்ளது. இதற்கான இறுதிக்காட்சிகள் சியாமளாவில் படமாக்கப்பட்டுவருகின்றன.

---

## பிரேம்நஸீர் — சரோஜாதேவி

மேளம் கொட்ட நாதஸ்வர இசை ஒலிக்க பிரேம்நஸீருக்கும் சரோஜாதேவிக்கும் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்துக்கு சிவாஜிகணேசன், எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி, சுந்தரிபாய், சுப்பையா, பாலையா, ஏ. கருணநிதி ஆகியோர் வந்திருந்தனர். இக்காட்சி 'பாலும் பழமும்' படத்திற்காகச் சமீபத்தில் படமாக்கப்பட்டது.

---

## அஞ்சலியின் இருமொழிப் படம்

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் நடிகை அஞ்சலி தேவி சொந்தமாகத் தயாரித்து வரும் படம் வீனஸ் ஸ்டூடியோவில் சுறு சுறுப்புடன் வளர்த்து வருகின்றன"

வேதாந்தம் ராகவய்யா டைரக்ட் செய்ய, அஞ்சலியின் கணவர் ஆதிநாராயண ராவ் இசையமைக்க, அஞ்சலி கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தின் திரைக்கதை வசனத்தை தஞ்சை ராமய்யாதாஸ் எழுதியுள்ளார்.

## குடுகுடுப்பை ஜெமினி

'குடுகுடுப்பை' ஆட்டிக் கொண்டு "ஐயாவுக்கு நல்ல காலம் பொறக்குது: நல்ல காலம் பொறக்குது!" என்று குடுகுடுப்பை பழகுகிறார் ஜெமினிகணேசன்.

"கப்பலோட்டிய தமிழன்" படத்தில் குடுகுடுப்பைக்காரனாக மாறுவேடம் பூண்டு நடிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஜெமினிகணேசனுக்கு வருகிறது. இக்கட்டத்தை நன்றாகச் செய்யவேண்டுமென்பதற்காக ஒருநாள் அதிகாலையில் தனது காரை அனுப்பி குடுகுடுப்பைக்காரன் ஒருவனை வீட்டுக்குக் கொண்டுவந்து குடுகுடுப்பை ஆட்டிப் பழகினார்.

---

## ஆபிரிக்கர்கள் நடிக்கும் தமிழ்ப்படம்

முக்தா பிலிம்ஸ் 'பனித்திரை' என்ற படத்தில் சென்னையில் வந்து படிப்பதற்காகத் தங்கியுள்ள ஆபிரிக்கமாணவர்கள் நடித்தார்கள். இப்படத்தில் விமானியாக ஜெமினி கணேசன் நடிக்கிறார். அவர் செலுத்திச்செல்லும் விமானம் கறுப்பர் நாட்டில் விழுந்துவிடுகிறது. அவரை அங்குள்ள கறுப்பர்கள் காப்பாற்றி உதவுகிறார்கள். இந்தக் காட்சியில் நடிக்க ஆபிரிக்கமாணவர்களை இப்படத்தின் டைரக்டரும் தயாரிப்பாளருமான திரு. வி. சீனிவாசன் உபயோகப்படுத்தினர். பனித்திரை வேகமாக வளர்ந்துவருகிறது.

---

## பாதகாணிக்கை

"கப்பலோட்டிய தமிழனை"த் தயாரித்து வரும் பத்மினி பிக்சர்சார் "பாதகாணிக்கை" என்ற சமூகப் படத்தை மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து திரையிடுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் இப் படத்தைத் தயாரித்து வெளியிட திரு. பி. ஆர். பந்துலு திட்டமிட்டுள்ளார். இதன் திரைக் கதை வசனத்தை இரா. சண்முகம் எழுதுகிறார்.

இப்படத்துக்கான நடிக நடிகையர்கள் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

'கப்பலோட்டிய தமிழன்' இன்னும் சில மாதங்களில் தயாரித்து முடிவடைந்து விடுமென்றும் அதற்குப் பின் 'பாதகாணிக்கை'யில் பந்துலு கவனம் செலுத்துவாரென்றும் தெரிகிறது.

நாவலாசிரியர் அகிலனின் 'வேங்கையின் மைந்தனை'யும் பத்மினி பிக்சர்சார் படமாக்கத் திட்டமிடடுள்ளனர். இதில் சிவாஜிகணேசன் கதாநாயகனாக நடிப்பார்.

---

## 100 நாள் விழா

சரோஜாதேவி நடித்த "சசுரல்" என்ற இந்திப்படம் கல்கத்தா, அமிர்தசரஸ், பாட்னு, அம்பாலா முதலிய நகரங்களில் 100 தினங்களுக்கு மேலாக வெற்றிகரமாக ஓடியதைப் பாராட்டி விழாக் கொண்டாடப்பட்டது.

---

## மதுரம் நடிக்கும் நாடகம்

என். எஸ். கே. நாடக சபாவினர் "வேலுத்தம்பி தளவாய்" என்றபுது நாடகத்தை தயாரித்துள்ளனர். திருமதி டி. ஏ. மதுரம் மற்றும் என். எஸ். கே. நாடகசபா குழுவினரும் இந்நாடகத்தில் நடிக்கின்றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜுலை மாதம் 31-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.